1978 செப்டம்பர் 8]

திரு. மு. அம்பிகாபதி: முக்கியமான கேள்வி, ஒரு துணைக் கேள்வி கேட்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மணியைப் பாருங்கள். இது வரை எத்தனை கேள்விகள் முடிந்திருக்கின்றன என்றும் பாருங்கள். ஒரு மணி நேரத்திற்குள் கேள்விகளை முடிக்க வேண்டும். அடுத்த கேள்வி என்று சொல்லிய பிறகு திரு. அம்பிகாபதி அவர்கள் தயவு செய்து அமர வேண்டும்.

மணப்பாடு கிராமத்தில் பழங்காலச் சுரங்கம்.

*வினு எண். 86—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருச்செந்தூர் அருகில் உள்ள மணப்பாடு என்னும் கிராமத்தில் அவ்வூர் மக்களால் பழங்காலச் சுரங்கம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது பற்றி மேற்கொண்டு தகவல்களை அறிய தொல் பொருள் துறை என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) சுரங்கம் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை.

(ஆ) இவ் வினுவிற்கு இடமில்லை.

வேலஞ்சேரியில் எடுக்கப்பட்ட பழங்கால விக்கிரகங்கள்

*வினு எண் 87—திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) இந்த ஆண்டு (1977) செப்டம்பர், அக்டோபர் மாதத்தில் செங்கல்பட்டு மாவட்டம் திருத்தணிகைக்கு அருகேயுள்ள வேலஞ்சேரி கிராமத்தில் செப்பு பட்டயம் விக்கிரகங்கள் ஆகியவை பூமியின் கீழிருந்து தோண்டி எடுக்கப்பட்டது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அது எந்தக் காலத்தில் செய்யப்பட்டது?

(இ) அதனை அரசு கைப்பற்றியதா அல்லது அங்குள்ள கோயிலில் வைத்துள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(ஆ) அவைகள் எந்தக் காலத்தவை என்பது தெரியவில்லை. ஆனல் சுமார் 300 ஆண்டுகளாக மண்ணில் புதைபட்டு இருப்பதாக அறியப்படுகிறது.

(இ) தற்போது சிலைகள் அவ்வூர் மக்கள் நிறுவியுள்ள திருப்பணிக் குழுவின் வசம் இருந்து வருகிறது.

[1978 செப்டம்பர் 8

திரு. எஸ். ஜே. இராமசாமி: இந்தச் சிலைகளை எல்லாம் பாதுகாத்து மியூசியத்தில் வைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா? அதை மியூசியத்தில் வைக்காமல் ஏன் அங்கேயே வைத்திருக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இதை அரசுடைமையாக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன,

வடக்கனந்தல் பேரூராட்சியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

*வினா எண். 88—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

வடக்கனந்தல் பேரூராட்சியில் கோமுகி ஆற்றிலிருந்து குடிநீர் வழங்குவதற்கென மேல்நிலை தொட்டி ஒன்று கட்ட அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இல்லை.

உள்ளாட்சி மன்றத் தேர்தல்களில் வாக்காளர் வயது.

வினா எண். 89—திரு. நா. பழனிவேல்
திரு. என். கிட்டப்பா : } மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

வரும் நகராட்சி, ஊராட்சித் தேர்தல்களில் கேரளாவில் இருப்பதைப் போல் வாக்களிக்கும் வயது வரம்பை 21-லிருந்து 18 ஆகக் குறைக்கும் திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இல்லை.

திரு, என். பழனிவேல்: வரும் நகராட்சித் தேர்தல்களிலும், ஊராட்சித் தேர்தல்களிலும் வாக்காளர்களின் வயது வரம்பை 21-ல் இருந்து 18 ஆக கேரளத்திலும் மேற்கு வங்கத்திலும் குறைத்திருப்பது போல் குறைக்க அரசு முன்வருமா? குறிப்பாக 18 வயதில் தாய்மார்கள் எல்லாம் இரண்டு மூன்று குழந்தைகளுக்குத் தாயாகிவிட்டாலும் அவர்கள் வாக்களிக்க உரிமை இல்லாமல் இருக்கிறது. ஆகவே, உடனடியாக வரும் நகராட்சி, ஊராட்சித் தேர்தலுக்கு இந்த வயது வரம்பை 21-ல் இருந்து 18 ஆகக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?